போய்விட்டு இரவு 6 மணி அளவில் தான் திரும்புகிறார்கள். ஆகவே, அங்காடிகளுக்கு சென்று பொருட்களை வாங்குவதற்கு அவர்களுக்கு நடைமுறையிலே சிரமம் ஏற்படுகிறது. தனியார் மளிகைக் கடைக்காரர்கள் எல்லாம் காலையிலே 6 மணிக்கு கடையைத் திறந்து இரவு 10 மணி வரைக்கும் வியாபாரத்தை நடத்திக் கொண்டிருக்கிறார்கள். ஆகவே, அந்த கிராமப்புற ஏழை மக்கள் உணவுப் பொருட்களை வாங்குகிற வகையில் இரவு 8 மணி வரையில் அங்காடிகளைத் திறந்து வைப்பதற்கு அரசு ஆவன செய்யுமா என்று மாண்புமிகு அமைச்சர் மூலமாக அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ஜி. விசுவநாதன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தற்பொழுது கடைகள் காலை 9 மணியிலேயிருந்து 1 மணி வரையிலும், பிற்பகல் 3 மணியிலேயிருந்து 7 மணி வரையிலும்திறக்கப்பட வேண்டுமென்று முடிவு செய்யப்பட்டிருக்கிறது. இதிலே ஏதாவது மாற்றம் செய்ய வேண்டுமானால் அந்தந்த மாவட்ட நிர்வாகமே செய்து கொள்ளலாம் என்று மாவட்ட ஆட்சித் தலைவர்களுக்கு அனுமதி வழங்கி இருக்கின்றோம். அப்படிப்பட்ட பிரச்சினைகளை அந்தந்த மாவட்டத்திலேயே முடிவு செய்து கொள்ளலாம்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. சா. பன்னீர்செல்வம்.

திரு. சா. பன்னீர்செல்வம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திண்டிவனம் நகரத்திலே நான் மூன்று மாதங்களுக்கு முன்பாக, தள்ளுவண்டியிலே கெரோசின் விற்பவர்கள் எடுத்துக் கொண்டு சென்று பொது மக்களுக்கு விநியோகிக்கப்படவில்லை என்று அரசு அதிகாரிகளிடத்திலே சொல்லியும் இது வரையிலே நடவடிக்கை எடுக்க வில்லை.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. பன்னீர்செல்வம், கேள்வி நேரத்தில் குற்றச்சாட்டு கூடாது. இது சம்பந்தமில்லாத கேள்வி.

வினா எண் 34 திரு. கே. செல்வராஜ், மாண்புமிகு தொழிலாளர் நலத் துறை அமைச்சர்.

34—

கோயம்புத்தூரில் தொழிலாளர் நல ஆணையர் அலுவலகம் அமைத்தல்.

*11823—திரு. கே. செல்வராஜ்:

மாண்புமிகு தொழிலாளர் நலத்துறை அமைச்சர் கீழ்ககாணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கோயம்புத்தூரில் தொழிலாளர்கள் அதிகமாக உள்ளதால் தொழிலாளர் நல ஆணையர் அலுவலகம் அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது?

மாண்புமிகு திரு. சே. ரகுபதி, தொழிலாளர் நலத்துறை அமைச்சர். (ஆ): மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, (அ) மற்றும் கோவையில் தொழிலாளர் நல ஆணையர் அலுவலகம் ஒன்று துவங்குகின்ற உத்தேசம் எதுவும் கிடையாது.

திரு. கே. செல்வராஜ் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழ்நாட்டிலேயே தொழிற்சாலைகள் அதிகமாக இருக்கிற, லட்சக்கணக்கான தொழிலாளர்கள் இருக்கின்ற நகரம் கோவை மாவட்டமாகும். அங்கே எந்தவொரு சிறு பிரச்சினையானாலும், தொழிலாளர்கள் பிரச்சினைக்கு சென்னைக்கு வரவேண்டியுள்ள காரணத்தால் ஆணையாளர் அலுவலகத்தினுடைய ஒரு பகுதியையாவது அங்கே செயல்படுத்துவதற்கு அரசுக்கு உத்தேசம் உள்ளதா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. சே. ரகுபதி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எந்த சிறிய பிரச்சினைக்கும் சென்னைக்கு வரவேண்டிய அவசியம் கிடையாது. தொழிலாளர் நலத்துறை இன்றைக்கு தொழிலாளர் நல ஆணையருடைய தலைமையில் இயங்கினாலும், அது மூன்று மண்டலங்களாகப் பிரிக்கப்பட்டு, சென்னை, கோவை, மதுரை என்று மூன்று மண்டலங்களில் கோவை மண்டலத்திலே அங்கே இணை ஆணையர் அளவிலே அதிகாரிகள் இருக்கிறார்கள். துணை ஆணையர்கள், உதவி ஆணையர்கள் இருக்கிறார்கள். பிரச்சினைகளை அங்கே பேசித் தீர்த்துக் கொள்ள அனைத்து வழிவகைகளும் இருக்கின்றன. எனவே, எல்லாப் பிரச்சினைகளுக்கும் சென்னைக்கு வர வேண்டிய அவசியமில்லை, எனவே, தொழிலாளர் நல ஆணையர் அலுவலகம் ஒன்று கோவையில் துவங்க வேண்டிய அவசியம் கிடையாது.

முற்பகல் 10-40.

திரு. கே. செல்வராஜ்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எந்தவொரு பிரச்சினைக்கும் சென்னைக்கு வர வேண்டியதில்லை என்று மாண்புமிகு அமைச்சரவர்கள் பதில் அளித்தார்கள். * * * ஆணையாளர் அங்கே

*மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப் பெற்றன.

இருக்கிறபொழுது அவர்கள் இங்கு வந்து தங்கி 3 நாள், 4 நாள் இருந்து செயல்பட வேண்டிய அவசியம் இல்லை. ஆதலால், அங்கேயே தொழிலாளர்களுடைய குறைகளைத் தீர்ப்பதற்கு ஆணையாளர் அலுவலகத்தினுடைய ஒரு பகுதியை நிறுவ வேண்டுமெனக் கேட்டும், நிறுவுவதற்கு ஆலோசிப்பதற்கு அரசு ஆவன செய்யுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் ** என்று கூறிய சொற்றொடர்கள் அவைக்குறிப்பிலிருந்து நீக்கப்படுகின்றன.

மாண்புமிகு திரு. சே. ரகுபதி : தலைவரவர்களே, சம்பந்தப்பட்ட அதிகாரிகள் மீது ஏதேனும் தனிப்பட்ட முறையில் உறுப்பினர் புகார்கள் கொடுத்தால் அதன் மீது உரிய நடவடிக்கை எடுக்கப்படும். இதற்காக ஆணையர் அலுவலகத்தினுடைய ஒரு பகுதியைக் கோவைக்கு மாற்ற வேண்டிய அவசியம் கிடையாது. இணை ஆணையர் அங்கே இருக்கிறார்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திருமதி அ. தி. சரஸ்வதி

திருமதி அ. தி. சரஸ்வதி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஏழைகளின் வாழ்வில் ஒளிவிளக்காகத் திகழும், எங்களை வாழ வைக்கும் ஒப்பற்ற தலைவி, இதய தெய்வம், டாக்டர் புரட்சித் தலைவியின் புனித ஆட்சியில், பெரியார் மாவட்டத்தில் அதிக அளவில் சர்க்கரை ஆலைத் தொழிலாளர்கள் இருப்பதால் அங்கும் தொழிலாளர் நல ஆணையர் அலுவலகம் திறக்க அரசு முன்வருமா என அமைச்சர் மூலம் அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : கோயம்புத்தூருக்கே இல்லை என்று சொல்லியிருக்கிறார். பெரியாருக்குக் கேட்டால் எப்படி ? தனிக் கேள்வி போடவும்.

வினா எண் 35, டாக்டர் வெ. சரோஜா, மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் :

35—

வேளாண்மை அலுவலருக்கு செயல் விளக்க வயல் நிர்ணயம் செய்தல்.

*11782—டாக்டர் வெ. சரோஜா :

மாண்புமிகு வேளாண்மைத்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவுக்கு விடையளிப்பாரா :

*மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப் பெற்றது.